# 8

# ஆவிக்குரிய இஸ்ரவேலர்

*“நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள். முன்னே நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள் ” (1 பேது. 2:9, 10).*

ஹார்டிங், பல்கலைக்கழகத்தில் எனது புதிய ஏற்பாட்டு ஆராய்ச்சி வகுப்புகள் ஒன்றில் சற்று காலத்திற்கு முன்பு, நான் “காலம் நிறைவேறின போது” இவ்வுலகத்திற்குக் கிறிஸ்துவின் வருகை பற்றிப் பேசினேன். உடனே ஒரு மாணவரின் கை உயர்ந்தது, அந்த இளைஞர் ஆவலுள்ள ஆர்வத்துடன், “ ‘காலம் நிறைவேறின பொழுது’ என்பதன் அர்த்தம் என்ன?” என்று கேட்டார். நான் கலா. 4:4, 5க்குத் திருப்பி, கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய பவுலின் வார்த்தைகளை வாசித்தேன்: “நாம் புத்திர சுவிகாரத்தை யடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்.”

“காலம் நிறைவேறினபோது” என்பது, கிறிஸ்து நமது இரட்சகராக இவ்வுலகில் வருவதற்குத் தேவன் தம்முடைய நித்திய ஞானத்திலும் முன் சிந்தனையிலும் நியமித்து வைத்திருந்த முழு நிறைவான காலமாகும் என்று நான் விளக்கப்படுத்தினேன். இதை வேறு வகையில் கூறுவதென்றால், இரட்சகரின் பிறப்புக்கு முன் தெய்வீகத் திட்டமும் தயாரிப்பும் இருந்தது. அவருடைய வருகை என்பது பரலோக பிதாவின் சிந்தையில் பளிச்சிட்ட ஒரு சுருக்கமான சிந்தனையாகவோ மற்றும் அவசரமாய் திடீரென ஏற்பட்ட மனத்தூண்டுதலின் செயல்பாடாகவோ இருந்ததில்லை; மாறாக, அவரது வருகையானது உலகத்தின் அஸ்திபாரங்கள் இடப்பட்டதற்கு முன்னதாகவே தேவனுடைய சிந்தையில் நுட்பமாகத் திட்டமிடப்பட்டது. இன்றியமையாத நிகழ்ச்சிகள் நடந்த பொழுது, இந்த தெய்வீக இடையீடுதலுக்கு

*உலகமானது கனிந்த நிலையில் இருந்தபொழுது இயேசு பிறந்தார். வரலாற்றில் இந்த இணைவிடத்தைப் பவுல் "காலம் நிறைவேறினபோது" என்று தக்க வகையில் அழைத்தார்.*

*பழைய ஏற்பாட்டின் காலம் முழுவதும் - பிதாக்களின் காலம் மற்றும் மோசேயின் காலம் முழுவதும் - மேசியாவின் வருகைக்கான ஒரு முன்னு ரையை வடிவமைத்தது. பிதாக்களின் காலத்தில், தேவன், ஆபிரகாம் மற்றும் ஈசாக் ஆகியோரின் மூலம் ஒரு இனத்தைத் தம்முடைய சொந்த இனம் என்று அழைப்பதற்காக அவர்களைத் தேர்ந்து கொண்டார். இந்த இனத்தை அவர் யாக்கோபுக்குக் கொடுத்திருந்த "இஸ்ரவேல்" என்ற பெயரினால் அழைக்கத் தேர்ந்து கொண்டார். மோசேயின் காலத்தில், தேவன் தாம் தேர்ந்து கொண்ட இனத்தை சீனாய் மலையில் தாம் மோசேக்கு வெளிப்படுத்தின தம்முடைய நியாயப்பிரமாணத்திற்குக் கீழ் கொண்டு வந்தார். தம்மை ஆராதிக்கவும், தம்முடைய பரிசுத்த மக்களாக வாழவும் அவர்களுக்கு அவர் போதித்தார். இருந்தாலும், பழைய ஏற்பாட்டின் காலத்தின் போது தேவனு டைய செயல்பாடுகள் யாவும் உண்மையில் அடிப்படையான பணி யாகவும், "காலம் நிறைவேறும்போது" மேசியாவை உலகத்திற்குக் கொண்டு வருவதற்கான முன் ஏற்பாடாகவும் மட்டுமே இருந்தது. ''பழைய ஏற்பாட்டின் வரலாறு என்பது ஒரு இனத்தின் வரலாறாகவும், புதிய ஏற்பாட்டின் வரலாறு என்பது ஒரு நபரின் வரலாறாகவும் உள்ளது" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.*

*பழைய ஏற்பாட்டின் வரலாறு என்பது ஒரு இனத்தின் வரலாறாக இருப்பதாலும், இந்த இனத்தின் படைப்பு என்பது மேசியாவை உலகிற்குக் கொண்டு வருவதற்கான தேவனுடைய முன் பணியாக இருப்பதாலும், பவுல் கர்த்தருடைய சபையைத் தேவனுடைய இஸ்ரவேலர் என்று குறிப் பிட்டதைக் குறித்து நாம் திகைப்படையக் கூடாது: "இந்தப் பிரமாணத்தின் படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும் தேவனுடைய இஸ்ரவேலருக்கும் சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக'' (கலா. 6:16). அல்லது பவுல் சபையை, பழங்கால இஸ்ரவேலருடனான தேவனுடைய உடன்படிக்கை உறவிலிருந்து எடுத்தாளப்பட்ட சொற்றொடரினால் சித்தரிப்பதைப் பற்றியும் நாம் திகைப்படைவதில்லை: "ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனு க்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" (பிலி. 3:3). சபையை "இஸ்ரவேல்" என்றுரைக்கும் இந்தச் சித்தரிப்பானது நமக்கு மிகவும் தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருக்க வேண்டும், ஏனெனில் இது நமக்கு இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய இஸ்ரவேலராய் இருக்கின்றனர் என்றும் பழங்கால இஸ்ரவேலரைப் போலவே அவர்கள் தேவனுடைய சொந்த உடைமையாய்ப் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கூறுகின்றது!*

*புதிய ஏற்பாட்டில் சபை என்பதே புதிய ஏற்பாட்டு இஸ்ரவேல் என்பதற்கான மிகவும் சுருக்கமான உறுதிப்பாடாக ஒருவேளை 1 பேதுரு 2:9, 10 இருக்கின்றது எனலாம். 1 பேது. 1:22-2:10ல், கிறிஸ்தவராய் இருப்பது*

அர்த்தப்படுத்துவதென்ன என்று பேதுரு விளக்கம் அளிக்கையில் அவர் கிறிஸ்தவ மனமாற்றம் (1:22-25), நடக்கை (2:2, 3) மற்றும் அழைப்பு (2:4-10) ஆகியவற்றைக் குறிப்பிட்டார். கிறிஸ்தவர்கள் தேவனுடைய தேர்ந்து கொள்ளப்பட்ட மக்கள், அவருடைய உண்மையான இஸ்ரவேல் என்பதில் மகிழ்வடையும்படி அவர் தமது வாசகர்களை கேட்டுக் கொள்வதுடன் இப்பகுதியை முடித்தார்.

கிறிஸ்தவர்களை தேவனுடைய இஸ்ரவேலர் என்று கூறும் 1 பேதுரு 2:9, 10ல் பேதுருவின் குறிப்பின்மீது கவனம் செலுத்துங்கள். இந்த ஒப்பீடானது தேவனுடன் நமது விசேஷித்த உறவையும் மற்றும் தேவனிடத் திலிருந்து நாம் பெற்ற விசேஷித்த அழைப்பையும் உறுதிப்படுத்துகின்றது; இது நமக்கு கிறிஸ்துவுக்குள் அளிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய ஆசீர்வாதங் களில் அகமகிழக் காரணத்தை அளிக்கின்றது. நாம் ஆவிக்குரிய இஸ்ர வேலராய் இருக்கின்றோம் என்று இந்த வசனங்கள் நமக்குப் போதிக்கும்.

## தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி

முதலாவதாக, சபையை ஆவிக்குரிய இஸ்ரவேலாக விவரிப்பதில், கிறிஸ்தவர்கள் "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி" என்று பேதுரு கூறினார் (1 பேது. 2:9). அவர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டு, பொறுக்கி யெடுக்கப்பட்டு மற்றும் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தேவனு டைய தெய்வீகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் இனமாக, பூமியின் சகல மக்களிலிருந்தும் அழைக்கப்பட்டவர்களாக உள்ளனர்.

சீனாய் மலையில் மோசேயின் மூலம் இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன், "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார்'' (உபா. 7:6) என்று கூறியிருந்தார். மீண்டும், இஸ்ரவேலைப் பற்றி அவர், "இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர் களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தா யிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது" என்று கூறினார் (யாத். 19:5).

இருப்பினும், மனிதகுல வரலாற்றின் இந்தக் கடைசி நிலையில், மாம்சத்தின்படி இஸ்ரவேலர்களல்ல, கிறிஸ்தவர்களே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாய் உள்ளனர். பழைய இஸ்ரவேலர், சபை என்ற புதிய இஸ்ரவேலரை வழி நடத்த, அஸ்திபாரத்தை வடிவமைத்து, தோற்று வித்து, நிறைவேற்றினார்கள். கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் யாவரும் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட மக்களினமாய் இருப்பார்கள் என்பது தேவனுடைய முன் தீர்மானத்தின்படியான தேர்ந்து கொள்ளுதல் ஆகும் என்று பவுல் கூறினார்:

> தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாத வர்களுமாயிருப்பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்துகொண்டபடியே ... தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்து மூலமாய்த்

*தமக்கு சுவிகார புத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார் ... தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக எல்லாவற்றையும் நடப்பிக்கிற அவருடைய தீர்மானத்தின்படியே, நாங்கள் முன்குறிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் அவருடைய சுதந்தரமாகும்படி தெரிந்து கொள்ளப் பட்டோம் (எபே. 1:4, 6, 12).*

*விடப்பட்ட, மேலோட்டமாகக் காணப்பட்ட அல்லது புறக்கணிக்கப் பட்ட நம்பிக்கையைக் குலைக்கும் அனுபவத்தை நாம் அனைவருமே பெற்றிருக்கின்றோம். நாம் முற்றிலுமாக கடந்து போகப்பட்டு அல்லது இழந்து போகப்படும் வரையில் விட்டு விடப்பட்டிருக்க, மற்றவர்கள் முன்மொழியப்பட்டதை அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டதை நாம் கவனித்திருக்கின்றோம். நம்மில் சிலர் குழந்தைகளாய் இருக்கையில் ஒரு விளையாட்டுக்குக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்படும் பொழுது இப்படிப் பட்ட சலிப்பூட்டும் அனுபவத்தில் கடந்திருக்கின்றோம்; ஒன்று மற்றவர்கள் நமக்கு முன்னதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பார்கள் அல்லது நாம் முற்றிலுமாக கடந்து போகப்பட்டு, புள்ளிகளை மதிப்பிடுவதற்கு இரக்கத்துடன் வைக்கப்பட்டிருப்போம். ஒரு அட்டவணை வாசிக்கப் படுகையில் நம்மில் சிலர் இவ்வகையான கடும் சோதனை மூலமாக வாழ்ந்திருந்து, கனப்படுத்தப்படுபவர்கள் முதலாவது பெயரிடப்பட்டதைக் கண்டிருப்போம். நமது பெயரானது கடைசியாக வாசிக்கப்படுவதையும், தவறாக உச்சரிக்கப்படுவதையும் மட்டுமே கேட்பதற்கு நாம் எதிர் பார்ப்புடன் கவனித்திருப்போம். இப்படிப்பட்ட நிகழ்வுகள் நம்மை ஊக்கம் குறைய வைப்பதுடன், அவதிப்படுத்தும் வகையில் நமது நினைவுகளில் நீண்ட நாட்கள் தங்கியிருந்து, நமது சுய எண்ணத்தை நசுக்கி, நாம் "ஒன்றுமில்லை" என்று நம்மை நம்பச் செய்கின்றன. மகிழ்ச்சியற்ற இந்தச் சூழ்நிலைகள் நம்மை, அதிர்ஷ்டமற்ற ஒரு மனிதர் உதவிக்காக ஒரு மனோதத்துவ மருத்துவரிடம் வரும்போது அவர் சிகிச்சை தரும் முறையில் நடப்பது போல மோசமாக நம்மை நடத்துகின்றன. அம்மனிதர் அவரிடம், "மருத்துவர் அவர்களே, நான் தாழ்வு மனப்பான்மை கொண்டுள்ளேன், அதைக் குறித்து நான் என்ன செய்வதென்று தெரியவில்லை" என்று வேண்டிக் கேட்கின்றார். பல அமர்வுகளில் அந்த நோயாளியைச் சோதித்த பிறகு அந்த மனோதத்துவ மருத்துவர் அவரிடம், "மனிதரே, நீர் தாழ்வு மனப்பான்மை உடையவராய் இல்லை, நீங்கள் தாழ்ந்தவராக மட்டுமே இருக்கின்றீர்கள்?" என்று கூறினார்.*

*மக்கள் கடந்து செல்லும் சூழ்நிலைகள், மக்கள் பெற்றுள்ள திறமைகள், மக்கள் எப்படிக் காணப்படுகின்றனர், மக்கள் எவ்வளவு கூர்ந்த அறிவுடையவர்களாய் உள்ளனர், அல்லது மக்கள் எதை சொந்த மாக்கியுள்ளனர் என்பவற்றின் மீது மிக அதிகமான வலியுறுத்தம் கொடுக்கப் படுவதினால் இது வழக்கமாக உள்ளது. இதன் விளைவாக, இது நமக்கு நடைபெறும் பொழுது, இது பேரழிவு கொடுப்பதாக உள்ளது, ஏனெனில் இது நாம் போதிய அளவு திறமையுள்ளவர்களல்ல, போதிய அளவு பார்வைக்கு நல்லவர்களல்ல, போதிய அளவு கூர்ந்த அறிவுடையவர்கள் அல்ல, அல்லது நாம் சொந்தமாகக் கொண்டுள்ளவைகள் போதுமான*

வைகள் அல்ல என்று கூறுகின்றது.

பேதுருவின் கூற்றுப்படி கிறிஸ்தவர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப் பட்ட சந்ததியாய் உள்ளனர். இது நாம் மிகத் திறமையானவர்களாக, பார்வைக்கு மிகச் சிறந்தவர்களாக, அல்லது புத்தி கூர்மை உடையவர்களாக இருக்கின்றோம் என்பதால் அல்ல, அல்லது நாம் மிக அதிகமானவைகளைச் சொந்தம் கொண்டுள்ளோம் என்பதால் அல்ல, ஆனால் தேவனால் நாம் அன்புகூரப்படுகின்றோம் என்பதினாலேயே இது, உண்மையாய் உள்ளது. தேவனுடைய சித்தத்திற்கு விசுவாசம் மற்றும் கீழ்ப்படிதலுடன் பதில்செயல் செய்துள்ளோம், மற்றும் அவரது சபையார் என்ற அவரது பிள்ளைகளாகி இருக்கின்றோம். நமது பணம் அல்லது மனித தகுதித் திறமைகளினால் அல்ல, ஆனால் தேவனுடைய இரக்கத்தினாலேயே தேவனுடனான நமது தர நிலை விளைந்துள்ளது. பேதுரு, "... நீங்கள் இரக்கம் பெறாதவர்களா யிருந்தீர்கள், இப்பொழுதோ இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்" (1 பேது. 2:10) என்று கூறினார். தீத்துவுக்குப் பவுல், "நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின் படியே, மறு ஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்கு தலினாலும் நம்மை இரட்சித்தார்" (தீத்து 3:5) என்று கூறினார். கிறிஸ்துவுக்குள்ளான நமது ஞானஸ்நானத்தில், நாம் தேவனுடைய இரக்கத்தைப் பெற்று, அவர் தேர்ந்து கொண்ட சந்ததியின் அங்கமானோம்.

---

*இன்றைய நாட்களில் நாம் தேவனுடைய இஸ்ரவேலராய்*
*இருக்கின்றோம் என்பது*
*ஒரு பலம் மிக்க சத்தியமாக உள்ளது*
*அது நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு*
*ஆகியவற்றால் நம்மை மிகவும் பலப்படுத்துமளவு வல்லமை*
*நிறைந்ததாகும் ...*

---

இன்றைய நாட்களில் நாம் தேவனுடைய இஸ்ரவேலராய் இருக்கின் றோம் என்பது ஒரு பலம் மிக்க சத்தியமாக உள்ளது - இது தொல்லைப் படுத்தும் சூழ்நிலைகளும், நட்பற்ற இவ்வுலகமும் நம்மிடமிருந்து எடுத்துப் போட்டு விட முடியாத நம்பிக்கை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றால் நம்மை மிகவும் பலப்படுத்துமளவு வல்லமை நிறைந்ததாகும். எடுத்துக் காட்டாக, இது தேவனிடத்தில் ஜெபிப்பதற்கான நம்பிக்கையையும் தைரியத்தையும் நமக்குள் பாய்ச்ச வேண்டும். நாம் தேவையின் எந்த ஒரு வேளையிலும் அல்லது அவருக்குத் துதி செலுத்தி நன்றி செலுத்த விரும்பும் எந்த ஒரு வேளையிலும் அவருடைய அரியணையை அணுக முடியும். இது நாம் தேவனுடைய பலத்தின்படி வாழ்வதற்கு நம்மை ஏவ வேண்டும், ஏனெனில் தேவனுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாய் இருப்பது என்பது ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையுடைய தேவனுடைய பண்டக சாலையானது ஒருக்காலும் நமக்கு மூடப்படுவதில்லை என்பதை

மறைமுகமாய் உணர்த்துகின்றது (எபே. 2:18).

நாம் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாய் இருப்பதற்காக அகம் மகிழ்வோமாக.

## ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்

இரண்டாவதாக, சபை என்பது "ஒரு ராஜரீகமான ஆசாரியக் கூட்டம்" என்பதாகப் பேதுரு கூறினார் (1 பேது. 2:9). கிறிஸ்தவர்கள் இன்றைய நாட்களில் தேவனுடைய ஆசாரியர்களாய் உள்ளனர். ஒரு சரீரம் என்ற வகையில் அவர்கள் ஆசாரியர்களின் ஒரு ராஜரீகமாகத் தொகுக்கப் பட்டுள்ளனர்.

பழைய ஏற்பாட்டின் காலங்களில் தேவன் லேவிக் கோத்திரத்து ஆசாரியர்கள் மூலமாக தம் இனத்தார் தம்மிடம் சேர வழி செய்திருந்தார். அவர் லேவி கோத்திரத்தைச் சேர்ந்த அம்ராமின் குடும்பத்தில் இருந்து ஆசாரியர்கள் வர வேண்டும் என்று தேர்ந்து கொண்டார். அவர்கள் மக்களின் பலிகளை அவருக்கு அளித்தனர், மற்றும் அவர்கள் மோசேயின் பிரமாணத்தில் அட்டவணைப் படுத்தப்பட்டிருந்த நியமிக்கப்பட்ட வழிகளில் இஸ்வேலர் அவரை ஆராதிக்கும்படி வழி நடத்தினர்.

தேவன் லேவி கோத்திரத்தாரிடம், "... நானே உன் பங்கும் உன் சுதந்தரமுமாய் இருக்கிறேன்" (எண். 18:20) என்று கூறினார். லேவியர்கள் ஆராதனையில், ஊழியத்தில், மற்றும் வாழ்வில் தனிச்சிறந்த வகையில் தேவனுக்கு ஊழியம் செய்யும் கனம் அளிக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குத் தேவனிடம் சேர வழியும் அவருடன் மிக நெருக்கமான உறவுமுறையும் அளிக்கப்பட்டிருந்தது.

லேவி கோத்திர ஆசாரியத்துவமானது இனியும் செயல் விளவுள்ளதல்ல, மற்றும் கர்த்தரால் ஒரு புதிய ஆசாரியத்துவம் தேர்ந்து கொள்ளப் பட்டுள்ளது என்று 1 பேதுரு 2:9ல் பேதுரு கூறினார். கிறிஸ்துவின் மீட்புப் பணியின் மூலமாக, அவர் (தேவன்) தமது சபையை கிறிஸ்தவ யுகத்தின் ஆசாரியர்களாய் நியமித்துள்ளார்.

தேவன் தம்முடைய சபையை ஆசாரியக் கூட்டமென்று அழைத்த தோடு, அவர் அதை ஒரு "ராஜரீகமான" ஆசாரியக் கூட்டம் என்று அழைத்திருக்கின்றார். சபை என்பது ஆசாரியர்களின் இராஜ்யமாக அல்லது ராஜரீகமான ஆசாரியர்களாக இருக்கிறது. உபத்திரவப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு யோவான் பத்மு தீவில் இருந்து, "தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு ..." (வெளி. 1:6) என்று எழுதினார். பேதுருவும் கூட, "ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டுப்பட்டு வருகிறீர்கள்" (1 பேது. 2:5) என்று கூறினார். பரிசுத்த ஆவியானவருடைய உதவியினாலும் (ரோமர் 8:27) மற்றும் நமது மத்தியஸ்தரும் மகாப் பிரதான ஆசாரியருமான (1 தீமோ. 2:5; எபி. 7:26, 27) இயேசுவின் வேண்டுதல்

*ஊழியத்தினாலும் கிறிஸ்தவர் தேவனிடத்தில் நேரடியாகச் செல்ல இயலும். இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த மத்தியஸ்தர் மூலமாகவும் ஒரு கிறிஸ்தவர் தேவனிடத்தில் செல்லுவதில்லை. அவர் தேவனுடைய ஆசாரியராகத் தேவனுக்கு முன்பாக நின்று அவர் (கிறிஸ்தவர்), பட்டம் பெற்ற மனித குருக்கள், மறைந்த புனிதர்கள் அல்லது தூதர்கள் போன்றோரின் உதவி எதுவும் இன்றி, இயேசு கிறிஸ்துவின் மூலமாகத் தேவனிடத்தில் வேண்டுதல் செய்ய முடியும்.*

*லத்தீன் மொழியில் ''ஆசாரியர்'' என்ற வார்த்தையானது ''பாலம் கட்டுபவர்'' என்று அர்த்தப்படுகின்றது. பாலம் என்பதன் கருத்தானது பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஆசாரியரின் பணிப் பொறுப்பை விவரிக்கின்றது. ஆசாரியர் என்பவர் தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் ஆவிக்குரிய ஒரு வகையான பாலமாக இருந்தார். அவர் தேவனுடைய சித்தத்தை மனிதருக்குக் கொண்டு வந்தார், மற்றும் மனிதருடைய வேண்டுதல்களை தேவனுக்குச் சமர்ப்பித்தார். தேவன் ஆசாரியரின் மூலமாக மக்களிடத்திற்குச் சென்றார், மக்கள் ஆசாரியரின் மூலமாகத் தேவனிடத்திற்குச் சென்றனர். கிறிஸ்தவ யுகமாகிய இன்றைய நாட்களில் இது எவ்வளவு வேறுபட்டதாக உள்ளது! ஒருவர் கிறிஸ்தவராகும் பொழுது, கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கின்ற அந்தக் கணத்திலேயே அவர் தேவனுடைய ஆசாரியராகின்றார்.*

*தேவனுடைய ஆசாரியர்கள் என்ற வகையில் நமது தர நிலையானது நாம் தேவனுடைய ஊழியத்திற்கு பரிசுத்தப் படுத்தப்பட்டவர்களாகவும், அவருடனான ஐக்கியத்தில் வாழ அவர் நமக்குக் கொடுத்துள்ள இந்த பரிசுத்த நிலையைப் பயன்படுத்தவும் நம்மை வற்புறுத்த வேண்டும். தேவனுடைய ஆசாரியத்துவம் என்ற வகையில் தேவனுக்கு முன்பாக மிக உயர்ந்த சிறப்புரிமையுள்ள இடத்தை நாம் கொண்டுள்ளோம்.*

*நாம் "ஒரு ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாய்" இருப்பதற்காக நாம் அகம் மகிழ்வோமாக!*

## *பரிசுத்த ஜாதி*

*மூன்றாவதாக, கிறிஸ்துவின் சபை என்பது ''பரிசுத்த ஜாதி'' என்று பேதுரு கூறினார் (1 பேது. 2:9). உருவக நடையில் கூறும் பொழுது, சபை என்பது தேவனுடைய மக்களினமாக, அவருக்கென்று மட்டும் தனிப்பட்ட வகையில் பரிசுத்தப் படுத்தப்பட்ட மக்களின் இராஜ்யமாக உள்ளது.*

*இஸ்ரவேல், தேவனால் தேர்ந்து கொள்ளப்பட்ட இனம் என்ற வகையில் பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்டது. மோசேயின் மூலம் இஸ்ரவேலுக்குத் தேவன், ''உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (லேவி. 19:2) என்று கூறினார். மற்றும் அவர், "நீங்கள் எனக்கு ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதியுமாய் இருப்பீர்கள்" (யாத். 19:6) என்றும் கூறினார். பரிசுத்தமாயிருக்க இஸ்ரவேலருக்கு உண்டான இந்த அழைப்பைச் சிந்தையில் கொண்டு, ஒருவேளை லேவி. 19:2ல் இருந்து மேற்கோள் காட்டிக் கூட, பேதுரு தமது*

*நிருபத்தை வாசிப்பவர்களுக்கு, ‘‘உங்களை அழைத்தவர் பரிசுத்த ராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்த ராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே” (1 பேது. 1:15, 16) என்று கூறினார்.*

*தேவனுடைய மக்களினமான கிறிஸ்தவர்கள் தேவனைப் போன்று இருக்க வேண்டியவர்கள். அவர் பரிசுத்தராயிருக்கின்றார், நாம் பரிசுத்தராய் இருக்க வேண்டியவர்கள், அன்புப் பிள்ளைகள் என்ற வகையில் அவரைப் போலச் செய்து, நமது ஆளுமைத் தன்மைகளில் மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றில் நமது பிதாவைப் போன்றவர்களாய் இருக்க வேண்டும் (எபே. 5:1, 2).*

*“பரிசுத்தம்” என்ற வார்த்தையானது “புனிதப் பயன்பாட்டிற்காகத் தனியாய் வைக்கப்பட்டது’’ என்று எளிமையாக அர்த்தப்படுகின்றது. கிறிஸ்தவர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் வகையில், இந்த வார்த்தையானது தேவனுடைய மக்கள் அவருக்கென்று விலக்கமற்ற ஆராதனை மற்றும் ஊழியம் செய்யும்படி தனிப்படுத்தப்பட்டுள்ளனர் என்று அர்த்தப்படுகின்றது.*

*கிறிஸ்தவர் ஒருவர் இரு நாடுகளில் குடியுரிமை கொண்டுள்ளார் - அவர் வசிக்கின்ற நாட்டில் ஒன்றும், அவர் ஒப்புக் கொடுக்கப்பட்ட இடத்தில் ஒன்றும் ஆக இரு குடியுரிமைகள் அவருக்கு உண்டு. அவர் இந்த பூமியின் குடிமகனாக இவ்வுலகில் வாழ்கின்றார், ஆனால் அவரை ஆளுகின்ற குடியுரிமையானது தேவனுடைய நாட்டில் உள்ளது, அது ஆவிக்குரிய, பரலோக இராஜ்யமாக உள்ளது. பவுல், “நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்” (பிலி. 3:20) என்று எழுதினார்.*

*தேவனுடைய பரிசுத்த ஜாதியாய் இருப்பது எப்படி என்று ஒரு கிறிஸ்தவர் சிந்திக்கையில், உடனடியாக அவர் ஆறுதல் படுத்தப்படுகின்றார் மற்றும் அறைகூவல் விடுக்கப்படுகின்றார் தேவனுடனான தமது உறவினால் ஆறுதல் படுத்தப்படுகின்றார், மற்றும் இந்த உறவில் மறைந்துள்ள பரலோக அழைப்பினால் அறைகூவல் விடுக்கப்படுகின்றார். பூமியில் நமது நடக்கையானது எப்பொழுதுமே நமது பரலோகத்தின் குடியுரிமையைப் பிரதிபலிக்க வேண்டும் என்று பேதுரு கூறினார். கிறிஸ்தவ வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் பரிசுத்தம் விரிவாக்கப்பட வேண்டியதாக உள்ளது. பேதுரு, ‘‘… நீங்களும் உங்கள் நடக்கை களெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்” (1 பேது. 1:15) என்று கூறினார். நாம் செய்கின்றவை, சிந்திக்கின்றவை, மற்றும் கூறுகின்றவை யாவும் நாம் யாராயிருக்கின்றோம் என்பதைப் பிரதிபலிக்க வேண்டும்.*

*ஒரு தாய் தனது குழந்தைகள் தன்னை விட்டுச் சற்றுப் பிரிந்திருக்கும் வகையில் பள்ளிக்கோ அல்லது மற்ற சில செயல்களுக்கோ அனுப்புகையில், ‘‘நீங்கள் யாராயிருக்கின்றீர்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்” என்று கூறுவார்கள். அவர்கள் யாராயிருக்கின்றனர் என்பது பற்றிய தன்னுடைய நினைவு படுத்துதலானது அந்தக் கருத்திற்கேற்றபடி*

வாழ அவர்களை ஊக்குவிக்கும் மற்றும் அவர்களின் நடக்கையானது அவர்களின் நம்பிக்கையுடன் இசைந்திருக்கும் என்று அப்பெண்மணி நம்புகின்றார். கிறிஸ்தவர்கள் தாங்கள் யார் என்பதை, தேவனுடைய பரிசுத்த இனம் என்பதை நினைவில் வைத்திருந்தால், அவர்கள் பரிசுத்தமான வாழ்வு வாழ்வதற்குத் தங்களை கட்டுப்படுத்திக் கொள்வார்கள்.

நாம் "பரிசுத்தமான ஒரு இனமாய்" இருக்கின்றோம் என்பதில் அகம் மகிழ்வோமாக.

## அவருக்குச் சொந்தமான ஜனம்

நான்காவதாக, கிறிஸ்தவர்கள் "ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த மக்களாக" (1 பேது. 2:9; KJV) இருக்கின்றனர் என்று பேதுரு கூறினார். NASBயில் ''தேவனுக்குச் சொந்தமான மக்கள்'' என்றுள்ளது, இது கிரேக்கச் சொற்றொடரின் மிகத் தெளிவான மொழிபெயர்ப்பாகும். கிறிஸ்தவர்கள் தேவனுடைய தனிப்பட்ட உடைமை, அவருடைய சொந்த உடைமை என்பதே இங்கு கருத்தாகும்; மற்றும் இந்தக் கருத்தில் அவர்கள் தனிச் சிறப்பு வாய்ந்தவர்களாய் உள்ளனர்.

மாம்சப் பிரகாரமான இஸ்ரவேலருக்கு மோசேயின் மூலமாகத் தேவன், "நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்து கொண்டார்'' (உபா. 7:6) என்று உரைத்தார். அது போலவே அவர்களுக்கு அவர் பின்வருமாறும் கூறினார்:

> கர்த்தரும் உனக்கு வாக்குக் கொடுத்து உனக்குச் சொல்லியிருக்கிறபடி: நீ என்னுடைய கட்டளைகளையெல்லாம் கைக்கொண்டால், எனக்குச் சொந்த ஜனமாயிருப்பாய் என்றும், நான் உண்டுபண்ணின எல்லா ஜாதிகளைப் பார்க்கிலும், புகழ்ச்சியிலும், கீர்த்தியிலும் மகிமையிலும் உன்னைச் சிறந்திருக்கும்படி செய்வேன் என்றும், நான் சொன்னபடியே, நீ உன் தேவனாகிய கர்த்தரான எனக்குப் பரிசுத்த ஜனமாயிருப்பாய் என்றும், அவர் இன்று உனக்குச் சொல்லுகிறார் (உபா. 26:18, 19).

தேவனைச் சார்ந்த மக்களாயிருத்தல் என்ற இந்த அழகிய கருத்தானது இப்பொழுது கிறிஸ்துவின் யுகத்தில் சபை என்பது தேவனுடைய சொந்த உடைமையான மக்கள் ஆவர் என்று பேதுருவினால் கூறப்படுகையில் அவரால் கிறிஸ்துவின் சபைக்கு நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இந்தச் சொற்றொடரின் இதே விதமான ஒரு பயன்பாட்டைப் பவுல் தீத்து 2:14ல், கிறிஸ்து "நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்யப் பக்திவைராக்கிய முள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்" என்று கூறும்பொழுது ஏற்படுத்தினார்.

ஒரு சில ஆண்டுகளுக்கு முன் வாஷிங்டன் D.C.யில் எனது குடும்பத்தார்

ஒரு சுவிசேஷக் கூட்டத்திற்காக என்னுடன் இருந்தனர். அந்த வாரத்தில் அந்த சகோதரர்கள் எங்களைப் புகழ்பெற்ற அந்த நகரத்தில் உள்ள பல வரலாற்று இடங்களில் சிலவற்றுக்கு எங்களை அழைத்துச் சென்றனர். அன்பான ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கன் அவர்கள் கொலை செய்யப்பட்ட நாடக அரங்கத்தைச் சென்று பார்த்தது எனது மிகத் தெளிவான நினைவுகளில் ஒன்று ஆகும். அம்மனிதருடைய தனிச் சிறப்பினிமித்தம் அந்த இடத்தினால் நான் ஆழமாக ஈர்க்கப்பட்டேன். அந்த இடத்தின் கீழே உள்ள அருங்காட்சியகமானது, சிறப்பற்ற, மதிப்பற்ற பொருட்கள்கூட புகழ் பெற்ற ஒரு நபரால் சொந்தமாக்கப்படும்பொழுது அல்லது பயன்படுத்தப்படும்பொழுது மாபெரும் மதிப்புடையவைகளாகிவிடுவதை எனக்கு நினைவூட்டியது. உண்மையில் மிகச் சிறிய விலை மதிப்புள்ள ஒரு காலணியானது ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டு மதிப்பிட முடியாத தகுதியுள்ளதாக இருக்கின்றது, ஏனெனில் லிங்கன் கொல்லப் பட்ட பொழுது அது அவரால் அணியப்பட்டிருந்தது. அற்பமான சில பொருட்கள் கூட அதை உரிமையாகக் கொண்டுள்ளவர் யார் என்ற காரணத்தினால் விலைமதிப்பற்ற பொக்கிஷமாகி விடுகின்றது.

கிறிஸ்தவர்களாகிய நாம் நம்மிலே அதிகம் மதிப்பில்லாதவர்களாய் இருக்கலாம், ஆனால் நாம் தேவனுக்குச் சொந்தமான உடைமையான மக்கள், தேவனால் உரிமை கொள்ளப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்ற மக்கள் என்று காணப்படுகையில் உண்மையில் நமது விலைமதிப்பு உயரு கின்றது! இது பூமியின் எல்லா மக்களில் இருந்தும் நம்மைத் தேவன் தம்முடைய சொந்த உடைமையாக ஏற்படுத்தியுள்ளார் என்பதை உணர்ந்தறிய நமது சுய மதிப்பு, மதிப்பு பற்றிய நமது கருத்து ஆகியவற்றிற்கு அதிகமாய்ப் பங்களிக்க வேண்டும்.

ஒரு இளம் பையன் பொம்மை வாங்குவதற்காகத் தனது தாயுடன் ஒரு பொம்மைக் கடைக்குச் செல்லுவதை (மனதில்) சித்தரித்துக் கொள்ளுங்கள். விற்பனைக்கான பொம்மைகளை அவன் ஆய்வு செய்கையில், அவனது கண்கள் ''உள்ளது உள்ளபடியே விற்பனைக்கு'' என்ற எழுத்துக்கள் ஒட்டப்பட்ட உடைந்து போன ஒரு பயணப் படகின் மீது கவனம் செலுத்து கின்றன. அந்தப் பயணப் படகுப் பொம்மையானது "அது உள்ள நிலையில்" மிகச் சிறிய விலை மதிப்புடையதாக உள்ளது, ஆனால் அதுவே அவனது தெரிவாகின்றது. அதற்கான அற்பமான விலையை அவன் செலுத்து கின்றான். அவன் வீடு சென்ற உடனே, அதைப் பழுது பார்க்கத் தொடங்குகின்றான். ஒரு இடத்தில் சிறு அளவு பசையைத் தடவி, இன்னொரு இடத்தில் புதிய மரத்துண்டு ஒன்றை ஒட்டவைத்து, அதை முழுவதும் ஒருமுறை வண்ணம் பூசுகின்றான், இப்பொழுது அவன் "நான் உன்னை வாங்கினேன், நான் உன்னை பழுது நீக்கினேன். இப்பொழுது உண்மையில் நீ என்னுடையது!" என்று அதனிடம் கூற முடியும். இதே போன்ற ஒரு வழியில், கிறிஸ்தவர்கள் தேவனுக்குரியவர்களாய் உள்ளனர். அவர் நம்மைத் தமது குமாரனுடைய இரத்தத்தினால் கிரயம் கொண்டார், அவருக்கென்று நாம் மனம் மாறியதில் அவர் நம்மை மறுவுருவாக்கினார், மற்றும் நாம் அவருடன் நடக்கையில் அவர் நம்மைத் தொடர்ந்து மாற்றிக்

கொண்டு வருகிறார். இப்பொழுது அவர், "உண்மையில் இவர்கள் எனது சொந்த ஜனங்கள்" என்று மீட்பின் குறிப்பிடத் தக்க சிறப்பில் கூற முடியும். கிறிஸ்துவுக்கென்று மனமாற்றப்பட்ட ஒவ்வொருவரும் தேவனுடைய சொந்த உடமையான நபராய் இருத்தல் என்ற மேன்மையான ஆச்சரியம் நிறைந்த நிலைக்கு உயர்த்தப் படுகின்றார்.

நாம் ''அவருக்குச் சொந்தமான ஜனமாய்'' இருப்பதில் அகம் மகிழ்வோமாக.

## முடிவுரை

ஆகையால் சபை என்பது இன்றைய நாட்களில் ஆவிக்குரிய இஸ்ரவேலாக, தேவனுடைய இஸ்ரவேலாக உள்ளது. பழைய (ஏற்பாடு) இஸ்ரவேலர்கள் தேர்ந்து கொள்ளப்பட்டது போலவே நாமும் தேர்ந்து கொள்ளப்பட்ட மக்களாக இருக்கின்றோம். பழைய ஏற்பாட்டுக் காலங்களில் இஸ்ரவேல் பெற்றிருந்தது போலவே நாமும் ஒரு ஆசாரித்துவத்தைப் பெற்றிருக்கின்றோம். இஸ்ரவேலானது தேவனுடைய பரிசுத்த இனமாக இருந்தது போலவே, இன்றைய நாட்களில் சபை என்பது தேவனுடைய பரிசுத்த இனமாக உள்ளது. பழைய நாட்களில் தேவன் இஸ்ரவேலைத் தம்முடைய சொந்த உடமையாயிருக்க அழைத்தது போலவே, கிறிஸ்துவின் யுகத்தில் தேவன், கிறிஸ்துவின் சபையைத் தாம் தேர்ந்து கொண்ட உடமையாக மதிக்கின்றார்.

ஒவ்வொரு நவம்பர் மாதத்தின் நான்காவது வியாழக் கிழமையையும் அமெரிக்கர்கள் நன்றி செலுத்தும் நாளாகக் கொண்டாடுகின்றனர். ஒரு குறிப்பிட்ட நாளான்று நன்றி செலுத்தும் நாளாக இருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாட்டில் எந்த இடத்திலும் கட்டளையில்லை என்று நாம் புரிந்து கொண்டிருக்கையில், இது நன்றி செலுத்துதல் என்பது ஒரு அன்றாட ஆவியாக, தொடர்ச்சியான ஒரு எண்ணப்போக்காக இருக்க வேண்டும் என்று சித்தரிக்கின்றது. புதிய ஏற்பாட்டில் நன்றி செலுத்துதலுக்கு ஒரு நாள் நியமிக்கப்படவில்லை; அது ஒரு இயற்கைப் பண்பாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ''நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரித்து'' (எபே. 5:20) வாழ்கின்றதாகப் பவுல் பண்புப் படுத்துகின்றார். கிறிஸ்தவர்கள் பெற்றுள்ள ஆசீர்வாதங்களை நாம் அக்கறையாய் கவனிக்கையில், ஒவ்வொரு நாளும் நன்றி செலுத்தும் நாளாய் இருக்க வேண்டும் என்று புதிய ஏற்பாடு ஏன் கூறுகின்றது என்பதை நாம் சுலபமாய்க் காண முடியும். நாம், "தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாக," "பரிசுத்த ஜாதியாக," "ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக," மற்றும் "தேவனுக்குச் சொந்தமான ஜனங்களாக'' இருக்கும் வகையில், நாம் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம், மற்றும் நாம் ஒவ்வொரு நாளையும் முடிக்கையில் "எண்ணிப் பார் நீ பெற்ற ஆசீர்வாதத்தை எண்ணிப் பார் அவைகளை ஒவ்வொன்றாக" என்று பாட வேண்டும்.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இல்லையென்றால், தேவன் மனிதருக்கு

அளிக்கின்ற மிக உயர்ந்த மாபெரும் ஆசீர்வாதங்களைத் தவற விடுகின்றீர்கள். தேவன் தம்முடைய சபையின் மீது பொழிந்திருக்கின்ற சிலாக்கியங்களை நீங்கள் கண்டுள்ள இவ்வேளையில், தேவன் உங்களை அதன் (சபையின்) அங்கமாக்க நீங்கள் அனுமதிப்பீர்களா?

## படிப்பு மற்றும் கலந்துரையாடலுக்கான கேள்விகள்

1. "காலம் நிறைவேறினபொழுது" என்ற சொற்றொடருக்குச் சுருக்கமான விளக்கம் தரவும்.
2. பழைய ஏற்பாட்டுக் காலமானது உலகத்தைக் கிறிஸ்துவின் வருகைக்கு எவ்விதத்தில் தயாரித்தது?
3. கிறிஸ்தவர்களை தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட இனம் என்று எவ்விதத்தில் குறிப்பிட முடியும்?
4. தேவனிடத்தில் நமது நிலை என்பது தேவனுடைய இரக்கம் மற்றும் நமது விசுவாசம், கீழ்ப்படிதல் ஆகியவற்றின் அடிப்படையின் மீது அமைந்துள்ளது.இதனை, தகுதியின் அடிப்படையில் அமைந்துள்ள ஒரு நிலையுடன் ஒப்பிடவும்.
5. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தில் ஆசாரியத்துவம் வகித்த பங்கு என்ன?
6. பழைய ஏற்பாட்டுக் காலங்களில் ஆசாரியர்களாய் இருந்தவர்கள் யார்?
7. "ஆசாரியத்துவம்" தொடர்பாக "ராஜரீகம்" என்ற வார்த்தை தரும் அர்த்தம் என்ன?
8. சபை என்பது எந்தக் கருத்தில் "பரிசுத்த ஜாதியாக" உள்ளது?
9. கிறிஸ்தவர் ஒருவர் எவ்விதம் இரு நாடுகளின் குடிமகனாக உள்ளார் என்பதை விவரிக்கவும்.
10. "அவருக்குச் சொந்தமான ஜனம்" என்ற சொல் விளக்கத்தை மவிவரிக்கவும்.
11. கிறிஸ்தவர்கள் தேவனுடைய விசேஷித்த மக்களாய் இருப்பதை நீங்கள் சிந்திக்கும் பொழுது, உங்கள் மனதிற்கு வரும் ஆசீர்வாதங்கள் என்னென்ன?
12. இன்றைய நாட்களில் நாம் ஆவிக்குரிய இஸ்ரவேலுக்குள் எவ்விதம் பிரவேசிக்கின்றோம்?